# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 148/நகராட்சி/2018**

**நாள் : 01/10/2018**

**திரு T. சண்முகம்,**
**விழுப்புரம் – 605 401.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**விழுப்புரம் நகராட்சி,**
**விழுப்புரம்.** – **எதிர் மனுதாரர்**

விழுப்புரம் நகராட்சி, சாலாமேடு, V.G.P. நகர்– கிழக்கு, வள்ளுவன்–வாசுகி தெரு, எண்.90 என்ற முகவரியில் வசிக்கும் திரு T. சண்முகம் அவர்களின் 23.06.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.06.2018 அன்று பெறப்பட்டு 148/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

விழுப்புரம் நகராட்சி, சாலாமேடு, V.G.P. நகர்– கிழக்கு, வள்ளுவன்–வாசுகி தெரு, எண்.90 என்ற முகவரியில் வசிக்கும் திரு T. சண்முகம் என்பவர், 01.08.2017 நாளிட்ட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ ஆணை எண்.196/2017–இல் ஆணையிட்டவாறு, விழுப்புரம் நகராட்சி, சாலாமேடு, வள்ளுவன்–வாசுகி சாலை சீரமைக்கப்படவில்லை எனத் தெரிவித்து, அச்சாலையினை உடனே சீரமைத்துத் தர ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக விழுப்புரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. மேற்குறிப்பிட்ட சாலையினை ரூ.8.60 லட்சம் செலவில் சீரமைக்க, திருமதி P. சாந்தா அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு, மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதென்றும், 29.06.2018 அன்று வழங்கப்பட்ட பணி உத்தரவினை ஏற்று சாலை சீரமைக்கும்பணி ஒரிரு மாதங்களில் செய்து முடிக்கப்பட்டுவிடும் என்று தனது 16.07.2018 நாளிட்ட கடிதத்தில் நகராட்சி ஆணையர் தெரிவித்திருந்தார்.

2. இது சம்பந்தமாக முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை செய்யும் பொருட்டு, 03.10.2018 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு வருமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தனது 05.09.2018 நாளிட்ட கடிதத்தில், தற்பொழுது வள்ளுவன்–வாசுகி சாலை சீரமைக்கப்பட்டு விட்டதால் தனது முறையீட்டு மனு மீது எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவேண்டாம் என்றும் சாலை சீரமைத்துத் தர ஆணையிட்டதற்கு இம்முறைமன்ற நடுவத்திற்கு தனது நன்றியையும் தெரிவித்துள்ளார். பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் சாலையினை சீரமைத்துத் தந்த விழுப்புரம் நகராட்சி அலுவலர்களின் செயலைப் பாராட்டி, இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துக்கொள்ள முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2018– ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 1–ஆம் நாளன்று,** என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

22/10/2018

செயலாளர்

22.10.18

22/10/18

பெறுநர்

1. திரு T. சண்முகம்,
எண்.90, வள்ளுவன் வாசுகி தெரு,
V.G.P. நகர் கிழக்கு,
சாலாமேடு, விழுப்புரம் – 605 401

2. நகராட்சி ஆணையர்,
விழுப்புரம் நகராட்சி,
விழுப்புரம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி